# கிருபையின் பிரயாணம் - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில்: நீங்கள் இதுவரைக்கும் எப்போதாவது சொல்லியிருக்கிறீர்களா, “என்னால முடியாது! என்னால கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது?

**டாக்டர் வேயின் பார்பர்:** ஒருநாள் காலையில் நான் எழுந்ததும், ஜான், உங்ககிட்ட உண்மைய சொல்ல விரும்புகிறேன், அன்னைக்கு எனக்கு கிறிஸ்தவன் என்ற உணர்வே இல்லை. யாராக இருக்கவேண்டும் என்பதில் அதிக கவனம் இல்லாமல் இருந்தேன். அதாவது, அந்த உணர்வோடு தான் நான் கண்விழித்தேன். ஒரு பழங்காலத்து பையன் சொன்னது ஞாபகமிருக்குதா, “தேவனே, நா பேராசப்படல. எனக்கு இச்சையான சிந்தனைகள் இல்லை. னா பொய் சொன்னது கிடையாது, யாரையும் நா ஏமாத்துல, ஆனா இப்ப என்னோட படுக்கையில் இருந்து நா எழுந்திருக்க போகிறேன்.”

தேவன்  என்னிடம் செய்யும்படி சொன்ன காரியத்தை செய்ய எனக்கு திறமை இல்லை. இந்த கிறிஸ்தவ வாழ்க்கையை என்னால் வாழ முடியாது. அப்ப எனக்குள் வாழ்கிறவர் என்னை பெலப்படுத்துகிறவராக

இருக்கிறார், அவர் என்னிடம் இருந்து எதிர்பார்க்கிற காரியங்களை நான் செய்யும்படி எனக்கு சத்துவத்தை அளிக்கிறார்.

**அறிவிப்பாளர்:** இன்றைய எனது விருந்தினர் ஒரு கருத்தரங்கு பேச்சாளர், நூலாசிரியரும் போதகருமான Dr. வேயின் பார்பர், வுட்லாந்து பார்க் பாப்டிஸ்ட் திருச்சபையின் போதகராக இருக்கிறார் சாடாநோகா, டெநீசீ

**பார்பர்:..** அவர் நமக்குள் வாசம்பண்ணி நம்மிடம் இருந்து நாம் செய்யவேண்டிய அனைத்தையும் செய்யும்படி சத்துவமளிக்கிறார். அதுதான் நற்செய்தியாக இருக்கிறது. அதுதான் சுவிசேஷத்தின் அழகு தன்மையாகவும் இருக்கிறது. அது இரட்சிப்போடு நின்று விடுவதில்லை. கிறிஸ்து நமக்குள் வந்து வாசம்பண்ண துவங்குகிறார். அவர்தான் நமது நித்திய ஜீவன். அவர்தான் நமது ஜீவன் அதைதான் ஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்க எப்படி அவரை ஏற்றுகொண்டீர்களோ அப்படியே அதில் நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். அவரை நம்பிடுங்கள்.

**அறிவிப்பாளர்:** ஜான் அன்கேர்பெர்கின் இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் தான் ஜான் அன்கெர்பெர்க் நான் பேசிக்கொண்டு இருப்பது Dr. வேயின் பார்பருடன். இவர் கிறிஸ்தவர்களை ஊக்குவிப்பதில் அதிக ஆர்வமுடையவராக இருக்கிறார் தங்கள் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்தவ வாழ்க்கை பற்றி கேள்விப்பட்டு கொண்டிருப்பவர்கள் அதன் படி வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் முயற்சித்தும் அதில் தோல்வி அடைந்து நிற்கிறார்கள். அதினால் நீங்கள் சோர்வடைந்து இருக்கலாம், நீங்கள் ஒருவேளை,எனக்கு மட்டும் ஏன் இது நடப்பதில்லை என்று நினைக்கிறீர்களா? என்னிடம் என்ன குறை இருக்கிறது என்கிறீர்களா? தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் மீது பவுலுக்கு இருந்த இதே கரிசனையை பற்றி வசனங்களில் பார்க்க முடியும், அவரும் கூட தனக்கு, தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதை பார்க்க முடியும். அது நம் எல்லாருக்கும் உரியது. நாங்க இங்க மேடையில் உட்கார்ந்து பேசுவதால் நாங்கள் விசேஷித்தவர்கள் அல்ல. உண்மையில், இதை மையமாக கொண்டு தான் நம்முடைய வாழ்வின் சுழற்சி ஏற்பட்டு கொண்டு இருக்கிறது. இன்றைக்கு நாங்கள் பகிர்ந்துகொள்ள இருக்கிற தலைப்பு உங்களுக்கு பிடிக்கும் என நம்புகிறேன், “இயேசுவுடன் கீழ் அறையில்.” உங்கள் இருதயத்தில் இயேசு தமது வாசஸ்தலமாக உணரும்படி செய்வது. சரி, வேயின், இந்த வாரம் முதல் முறையாக பார்க்கிறவர்களுக்காக நாம என்ன

பார்த்துகொண்டு இருக்கிறோம் என்பதை சுருக்கமாக சொல்லுங்கள். நம்மூலமாக கிறிஸ்து வாழ்ந்திட உள்ளான மனுஷன் எப்படி எங்கிருந்து பெலத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம். அதன் அர்த்தம் என்ன என்பதை தெரிந்துகொள்ள வேண்டும், வாக்குத்தத்தங்கள் என்ன, அதை எபப்டி அப்பியாசப்படுத்த வேண்டும்.

**பார்பர்:..**சரி, நாம யோவான் 7:38டை பார்த்தோம் அதில் கிறிஸ்து சொல்கிறார், அதாவது, அது அவருடைய வாக்குத்தத்தம், "உங்களுக்குள் இருந்து ஜீவா தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு ஓடும்." இப்ப, அது என்ன என்று எனக்கு புரியாமல் இருந்தது. என்னால கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது என்று எனக்கு புரியவில்லை. அநேக கிறிஸ்தவர்கள் இந்த முடிவிற்கு வந்துதான் ஆகவேண்டும். அவர்கள் மிகமோசமான விதத்தில் தோற்று போகிறார்கள், அதினால் சோர்ந்துபோகிறார்கள், ஏன் என்று அவர்களுக்கு தெரியவில்லை. தேவன் எதிர்பார்க்கிரவைகளை நாம் செய்வதற்கு நமக்குள் இருக்கும் கிறிஸ்துவானவர் நமக்கு சத்துவத்தை அளித்திடுவார் என்று அவர்களுக்கு புரியவில்லை. நமக்கு கொடுக்கப்பட்டிருப்பதை செயல்படுத்த துவங்கும் விதம்தான் இதற்கான இரகசியம். அது இன்னொரு அனுபவம் என்று சொலமுடியாது. அது இன்னொரு ஆசீர்வாதம் அல்ல. கிறிஸ்துதான் நமது அனுபவம் அவர்தான் நமது ஆசீர்வாதம், அவருக்குள் நமக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும்

கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதெல்லாம் நாம் எங்கிருக்கிறோம் என்பதை பொறுத்து இருக்கிறது. அதற்குள் எப்படி நுழையப்போகிறோம்? எபேசியர் 3ம் அதிகாரத்தின் ஜெபத்தை நம்புகிறேன், மற்ற இடங்களை விட இங்கு பவுல் தெளிவாக எடுத்துரைத்து இருக்கிறார். எல்லா நிருபங்களிலும் இருக்கிறது, ஆனால் இந்த நிருபத்தில், கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கும் சகல ஆசீர்வாதங்களை சொல்லி முடித்த பிறகு, அவைகளால் நாம் எப்படி பலபடுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று  கூறுகிறார்.

**ஆன்கர்பெர்க்:** அந்த ஜெபத்தை பற்றி சொல்லுங்க.

**பார்பர்:**..சரி, மூன்றாம் அதிகாரத்தின் பதினான்காம் வசனத்தை பாருங்க, "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமக்காரணராகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, அவருடைய மகிமையின் ஐசுவரியத்தின்படி உங்களுக்கு அநுக்கிரகம் பாராட்ட வேண்டிகொள்கிறேன். - இவை அனைத்தும் தேவனுடைய ஆராய்ந்து முடியாத ஐசுவரியங்கள் என பார்த்தோம், அது மட்டுமல்ல, ஒன்றாம் அதிகாரத்தில் சொல்கிறார் அவர் அந்த ஐசுவரியங்களை நமக்கு கொடுத்திருக்கிறார்; அவர் சொல்கிறார் - "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்பட வேண்டும்." மேலும் அவர் சொல்வதை பாருங்கள், "அப்படி இருந்தால்

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருப்பார்."

இங்க சொல்லப்படும் கிரேக்க பதத்தை பார்க்கும்போது, விசுவாசத்தினாலே கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் வாசமாயிருப்பதை கூறுகிறது. அதுதான் உங்களுக்கான திறவுகோல் வார்த்தை, "வாசமாயிருத்தல்" அதற்கு என்ன அர்த்தம், காடோய்கியா? தென் பகுதியில் இருப்பதினால், அதனுடைய அர்த்தம் என்ன என்று எங்களுக்கு தெரியும். நீங்க சொன்னது போல, வீட்டின் கீழ்லறை. அதாவது, அவர் வீட்டின் கீழ்லறையாவார். இப்ப, அவர் நம்முடைய வாழ்வில் ஒரு அறையை வாடைக்கு பெற்றுகொள்ளும்படியாக வரவில்லை, வீட்டையே வாங்கிவிட்டார். நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு பகுதியின் திறவுகோல்களை அவர் கேட்க்கிறார். நம்மிடம் இருக்கும் பிரச்சனை என்னவென்றால், நம்முடைய வாழ்வின் சில பகுதிகளை அவருக்கு விளக்கி பூட்டி வைக்கிறோம். "ஆண்டவரே, நீங்க இதை செய்யலாம், இதுல தலையிடலாம், ஆனா இந்த பக்கம் நீங்க கையே வைக்க கூடாது என்கிறோம்." சரி, இது பிரச்சனையின் ஒரு பகுதியாக இருக்கிறது. நாம வளரவளர அவருக்கு விட்டுகொடுக்காமல் நாமே வைத்துகொண்டிருக்கும் பல சாவிகளை பற்றி நாம் தெரிந்துகொள்ள துவங்கிடுவோம்.

உள்ளான ஒரு இடம் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். சரி, ஜான், நீங்க அங்க இருந்தீங்கல்லா. மிசிசிபியின் உட்புறங்களில், எனக்கு

அருமையான நண்பர்கள் இருக்கிறார்கள். அவங்க வீட்டிற்கு அருகில் தான் கூட்டம் நடத்தினோம் அவங்க எங்களை அவர்கள் வீட்டில் தங்க வைத்தனர், ஏன்னா அந்த குறிப்பிட்ட பகுதியில் எந்த விடுதிகள் இல்லை. அவங்க ரொம்ப பிரியமா இருந்தாங்க. அங்க இசை வாசித்த நபர், என்னை ஜாக்சனில் பிக்கப் செய்தார், மிசிசிபியில், நாங்க கிட்டத்தட்ட ஒருமணிநேரத்துக்கு மேல ஒன்றரை மணிநேரமிருக்கும், இல்ல இரண்டு மணிநேரமாச்சு, அங்க போய் சேர. அது ஊருக்கு வெளியில் இருந்தது, ஏதோவொரு காட்டுக்கு நடுவுல இருப்பதுபோலிருந்தது. அருமையான இடம்; 150- 200 ஏக்கர்களும் மான்களும் வான்கோழிகலுமா இருந்துச்சு. அதாவது, அது ஒரு அருமையான இடம், ஒன்றுமில்லாத இடத்தின் மத்தியில் இருந்தது.

நாங்க அங்க போன போது; உண்மைய சொன்னா, நா முதல் முறையா அங்க போனது எனக்கு நல்லா நினைவிருக்குது. வண்டீல போனோம். அங்க ஒரு கூடைபந்து போட்டி தனது பேரபிள்ளைகளுக்கு காத்திருப்பது போன்ற சூழல் இருந்தது. ரொம்ப பழமையான இடம். அந்த கோல் போஸ்ட்ல இரண்டு குச்சிகள் சாய்வாக இருந்தது, பழைய இரண்டு தடிகள். உண்மையில், அங்க போகும்போது நான் கிண்டலா சொன்னேன், “இந்த தடிகள் எதுக்காக இப்படி முதுகை காட்டிட்டு இருக்குன்னு கேட்டேன்.” நாங்க கார்ல இருந்து இறங்கினோம். அவங்க யாரும் வீட்டில் இல்லை. நாங்க காரைவிட்டு இறங்கினதும் என்னோட வாழ்க்கையில் பார்த்திராத இரண்டு பெரிய நாய்கள் வந்தது, அவை

சிநேகமாக அருகில் வரவில்லை, எங்களை மதிய உணவின் விருந்தாக்குவது போல இருந்தது. நான் நினைத்தேன், ஓ, முடிந்துசுது. நா ஒரு தடியை எடுத்துக்கொண்டேன். என்னுடைய நண்பர் ஒரு தடியை எடுத்துகொண்டார், நாங்க வீட்டுக்குள்ள நுழைகிற வரைக்கும் அதை விரட்டியபடியே உள்ளே நுழைந்தோம். அது என்னவேனுனாலும் நினைச்சிருக்கும்.

நாங்க வீட்டுக்குள்ள போனோம், அங்க ஐந்து படுக்கை அறைகள் இருந்தது உங்களுக்கு எதுவேணுமோ அதை தேர்வு செய்திடலாம் என்பது போல. சமையல் அறை மேஜையில் ஒரு ஜாடி நிறைய டீ இருந்தது. எனக்கு ஐஸ் டீ ரொம்ப பிடிக்கும், குறிப்பாக அது நேர்த்தியாக தயாரிக்கப்பட்டிருக்க்கனும். அப்பறம் அங்க சில கேக்குகள் இருந்தது, அது குழி கேக்காக இருக்கலாம் அல்லது நல்ல பழைய தேங்காய் கேக்குகளாக இருக்க்கலாம், ஆனா உங்களை கடினப்படுத்துகிற விதமான கேக்குகளாக இல்லாமல் இருந்தது அதிர்ஷ்டம். ஆனா நா என்ன சொல்ல வர்ரேன்னா அதை பார்த்ததும் உங்க நாக்கு உங்க மூளைக்கு அதை எடுத்து வாயில போடுன்னு கட்டளை கொடுக்கும். அதாவது, அது நல்ல பொருள்தான். நா யோசித்தேன், நாம இன்னொருவருடைய வீட்டின் உட்புறம் வரைக்கும் வந்திருக்கிறோம்.

சரி, என்னுடைய வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் இயேசுவை இயேசுவாக இருக்க நான் அனுமதிக்கும்போது, உங்களுக்கு தெரியுமா,

அதற்கு இணையாக இருதயம் என்ற வார்த்தையை நீங்கள் சுவிசேஷங்களில் ஆராய்ந்து பாருங்கள். உங்கள் உணர்ச்சிகளுக்கு அதில் பங்குண்டு. உங்க வாழ்வின் எல்லா பகுதிகளுக்கும் இதில் தொடர்பு இருக்கிறது. நீங்க ஒரு பகுதியில் உங்களை அர்ப்பணித்து இருக்கலாம், ஆனா இன்னொரு பகுதியை விட்டுகொடுக்காமல் இருக்கலாம். நாம பாடுகிற ஒரு பாடல் இருக்குல்ல, “எல்லாவற்றையும் அர்ப்பணிக்கிறேன்,” நிறைய பேருக்கு இதுல சில பிரச்சனை இருக்குது. சரி, எனக்கு பிரச்சனை இருந்தது, என்பது உண்மைதான். ஆனா நாமா எல்லாவற்றையும் அர்ப்பணிக்கும் போது ஒரு விஷயத்தை புரிந்துகொள்ள வேண்டும் அதாவது அவர் எல்லாவற்றையும் பார்த்துகொள்வார் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்., அப்போது வளர்ந்திடுவோம். அவர் நம்முடைய வாழ்வின் உள்ளான இடத்தை அடைந்துவிட்டால், பலதரப்பட்ட பகுதிகளில் அவருக்கு நம்மை விட்டுகொடுக்க நாம் கற்றுகொண்டால், அதுதான் தேவனுடைய ஆவியினால் நாம் உள்ளான மனிதனில் பெலப்படுகிற நேரமாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** நம்முடைய வாழ்வின் அறைகளை தேவனுக்கு அர்ப்பணிப்பது எப்படி?

**பார்பர்:**..சரி, மற்றொரு நிகழ்ச்சியில் நான் ஏற்கனவே சொன்னதுபோல, யாராவது அதை கேட்க்க தவறியிருக்கலாம். நீங்கள்

அறிக்கையிடனும், முதலாவது, அந்த அறைய எதுன்னு தெரிஞ்சுக்கணும். தேவனுக்கு அது ஏற்கனவே தெரியும்.

**ஆன்கர்பெர்க்:** இதை கேட்டுகொண்டிருக்கிறவர்களும், இந்த மாதிரியான அறைகள் இருக்கிறதா என்று அறிந்திருக்கிறார்கள்.

**பார்பர்:**..நிச்சயமா. நா எதை பேசிக்கொண்டிருக்கிறேன் என்று உங்களுக்கு தெரியும். நாங்க யங்க பேசீட்டு இருக்கிறோம் என்று எல்லாருக்குமே தெரியும். எல்லாரும் தாங்கள் போய் தஞ்சம் புகும் ஒரு குகை இருக்கிறது. எல்லாருடைய வாழ்விலும் தஞ்சம் புகும் ஒரு ஸ்தலம் இருக்கிறது. தேவன் நம்மை பற்றிக்கொள்ள வெளியில் காத்திருப்பதில்லை. அவர் ஏற்க்கனவே நம்மை பிடித்து இருக்கிறது. அவரிடத்தில் நாம் தூய்மை அடையும்படி வர வேண்டும் என்றே அவர் விரும்புகிறார். அறிக்கையிடுதல் அவருடைய நன்மைக்காக செய்யபடுவது இல்லை. ஒருமுறை என் மகள் கல்லூரியில் இருந்து என்னை அழைத்தது நினைவிருக்கிறது. அவ கூப்பிட்டாள், “டேட்” அழுதுட்டு இருந்தா. நான் கேட்டேன், “என்ன நடந்தது, ஸ்டெப்னி?” அதற்கு அவ சொன்னா, நா ஒரு தப்பு செய்துட்டேன் அதை தேவனிடம் சொல்ல எனக்கு பயமாக இருக்கிறது என்றாள்.” நா அவகிட்ட கேட்டேன், “ஓவ், ஓவ், ஓவ், ஒரு நிமிடம் பொறுமையாயிரு.” என்று சொல்லி, “அறிக்கை செய்வதினால் தேவனுக்கு அது தெரிந்துவிடும் என்று தோன்றுகிறதா என்று கேட்டேன்.” அவ போன்ல அமைதியா

இருந்தா. நா சொன்னே, “ஸ்டெப்னி, அவருக்கு ஏற்கனவே அதை பற்றி தெரியும். அறிக்கையிடுதல் உன்னுடைய பிரயோஜனத்திற்குரியது என்றேன்.” அதற்கு பிறகு அவளுடைய வாழ்வில் எப்படி மன்னிப்பை அப்பியாசப்படுத்த வேண்டும் என்று அவளுக்கு நான் கற்றுகொடுக்க ஆரம்பித்தேன். சரி, அதுதான் திறவுகோல், அதுதான் உண்மையான திறவுகோல், அறிக்கையிடுதல்; தேவனுக்கு முன்பாக நின்று, வெளிப்படையாக பேசுவது. அதாவது, நீங்க பேசித்தான் ஆகவேண்டும், ஏன்னா அவருக்கு ஏற்கனவே அது தெரியும். ஏற்கனவே அதைப்பற்றி தெரியும். அவருக்கு நாம சரின்னு சொன்னதும் அவர் நமக்குள்ளாக இருந்து நம் மூலம் கிரியை செய்ய விரும்புகிறார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும், அவருக்கு விட்டுகொடுக்கும்போது, அவருக்கு அர்ப்பணிக்கும்போது, அப்போதுதான் அந்த பெலன் பாய்ந்தோட துவங்கிடும்.

**ஆன்கர்பெர்க்:** சரி, தேவனுடைய வார்த்தை எங்கிருந்து வருகிறது?

**பார்பர்:..**சரி, தேவனுடைய வார்த்தை இருக்கிறது, நான் அவருக்கு சரி என்று சொல்லும்போது, அது அவருடைய வார்த்தையின்படி இருக்கவேண்டும். ஒருமுறை என்னுடைய நண்பர் சொன்னது நினைவிருக்கிறது, அவர் சொன்னார், “ஒவ்வொருநாளும் கலையில் ஒருமணிநேரம் ஜெபிக்கிறேன், ஒரு குறிப்பிட்ட நாலும் உனக்காக ஜெபிப்பேன் என்றார்.” நா சொன்னே, “நண்பா, அருமையான விஷயம்.

சரி தேவ வார்த்தைக்கு எவ்வளவு நேரம் செலவிடுகிறாய் என்று கேட்டேன். அதற்கு அவன், உனக்கு ஒன்னு தெரியுமா? அது என்னுடைய அந்த நாளின் அட்டவணை படி பொருந்திடும் என்றான். நா ஸொனாஎ, அப்ப, உன்னோடு யார்தான் பேசுகிறார்கள், தனக்குத்தானே பேசறியா?அதாவது, தேவனுடைய வார்த்தைதான் ஜெபிப்பதற்கு நமக்கு வார்த்தைகளை கொடுகிறது. அது, மட்டுமில்லை, ஒருமுறை இன்னொருத்தர் எங்கிட்ட ஒன்னு சொன்னாங்க, ஜான், அவங்க சொன்னாங்க, வேயின், நீங்க இயேசுவை நேசிப்பதை விட தேவ வார்த்தையை நேசிக்கிறீங்கன்னு சொன்னாங்க." எங்கிட்ட பேசினவங்கள்ள முட்டாள் தனமா பேசினது அவங்கள் தவிர வேறு யாருமே இல்லை. ஏன்னா எனக்கு என்னோட மனைவிய பிடிக்கும் - பெண்ணை புரிந்துகொண்டிருக்கிறேன் என்று சொல்லுகிறவன் எதை பற்றியாவது பொய் சொல்ல வாய்ப்பு இருக்கிறதா - அவ என்ன சொல்ல விரும்புகிறாள் என்பதை கண்டுபிடிக்க விரும்புகிறேன், ஏன்னா அவளை நான் சந்தோசப்படுத்த விரும்புகிறேன். அவள் என்னிடத்தில் பிரியமா இருக்கான்னு தெரியும், ஆனா நா என்ன செல்கிறேன். இதே விதம் இங்கையும் பொருந்தும், கிறிஸ்துவுடனான நமது உறவு. நம்முடைய மனம் புதிதாகும் படியாக நாம் தேவனுடைய வார்த்தையில் மூழ்கி இருக்கவேண்டும் அப்போதுதான் தேவனுடைய ஆவியானவர், ரோமர் 12:1-2 கூறுகிறது, தேவனுடைய ஆவியானவர்

நமக்குள் மறுரூப அனுபவத்தை அளிப்பார், மருரூபமாக்கப்படும் அனுபவம் உண்டாகும்.

**ஆன்கர்பெர்க்:** ஒருவேளை தேவனுடைய வார்த்தையை வாசித்து அதை புரிந்துகொள்வது எனக்கு கடினமாக இருக்கிறது என்று சொல்கிறவர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பார்பர்:..**நாம, எல்லாருக்குமே ஒரே விதமான வாழ்க்கை முறை இருக்கிறதென்று சொல்வேன். எல்லாருக்குமே இருபத்திநான்கு மணிநேரம்தான். எல்லாருக்குமே இருபத்தி நான்கு மணிநேரம் தான். இப்ப, அந்த இருபத்தி நான்கு மணிநேரத்தை எப்படி பயன்படுத்துகிறோம் என்பது நம்முடைய தெரிந்தெடுப்பாக இருக்கிறது. இதில் எந்தவித முன்னுரிமைகளையும் வைத்து செயல்படாவிட்டால், இயேசுவுக்கு உரிய முக்கியத்துவத்தை அறிந்து செயல்படாவிட்டால், நம்முடைய படகின் துவக்கத்தை நாம் தவற விடுகிறவர்களாக காணப்படுவோம்.

ஒருவரோடு நான் போதிய நேரத்தை செலவிடாமல் அவரை பற்றி என்னால் எப்படி அறிந்துகொள்ள முடியும்? ஒருவர் பேசுவதை நான் கேட்க்காத பட்சத்தில் எப்படி நான் அவரோடு நன்றாக உரையாடி பழக முடியும்? நானும் அவருக்கு பிரதியுத்தம் கொடுக்க வேண்டும். அதுதான் தேவனோடு நடப்பதற்கு எனக்கு இருக்கும் திறவுகோலாகும்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, தேவனுடைய வார்த்தை, எபிரேயர் 4:12 கூறுகிறது, "ஜீவனும் வல்லமையும் உள்ளதையும், இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவ குத்துகிறதாயிருக்கிறது." இதை தான் நீங்கள் கவனமாக கவனிக்கவேண்டும் என விரும்புகிறேன், "இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையருக்கிறதாயும் இருக்கிறது," இந்த காரியத்தை பற்றிதான் நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம், நம்முடைய இருதயம். நம்முடைய இருதயத்திற்கு தேவையான வழிநடத்துதலை எங்கிருந்து பெறுகிறோம், இங்கிருந்துதான, அதை நீங்கள் வாசித்து பாருங்க, வேதம் உங்களை ஊடுருவி செல்வதாக இருக்கிறது. நான் உங்களோடு பேச போகிறேன், பிறகு நீங்கள் தீர்மானிக்கபோகிறீர்கள். உங்களுடைய தீர்மானம் என்ன?

**பார்பர்:..**இப்ப, தீர்மானம் இதுதான்: அதை நான் பெற்றுக்கொண்டு விசுவாசிக்க போகிறேனா, அல்லது என்னுடைய சொந்த வழியில் நான் போக போகிறேனா? இது எனக்கு ரொம்ப பிடிக்கும், "இருதயத்தின் சிந்தனைகளையும் யோசனைகளையும்." அதாவது, நிறைய பேருக்கு இது புரிவது கிடையாது, பாவம் என்பது இருதயத்தின் பிரத்ட்ச்சனையாகும். ஒருவர் பலவருடங்களுக்கு முன்பு எழுதிய புத்தம் நினைவில் இருக்கிறது தி ஹார்ட் ஆப் த பிராப்ளம் இஸ் தி

ப்ராப்ளம் ஆப் தி ஹார்ட். நல்ல தலைப்பு; அந்த புத்தகத்தை பற்றி தெரியாது, ஆனா அதன் தலைப்பு தெரியும், இந்த மாதிரியான நிலையில் தான் நாமும் இருக்கிறோம். இது பொதுவா இருதயத்தின் பிரச்சனைதான். எப்போதும் நம்முடைய தீர்மானம் தான் முக்கியமானது. தேவனுடைய வார்த்தை ஒரு வரைபடம் அல்ல, அது ஒரு கண்ணாடி. நாம எங்க இருக்கிறோம் என்பதை நமக்கு காட்டுகிறது, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் அதை வெளிப்படுத்தி காட்டுவதை தெளிவாக நம்மால் பார்க்க முடியும், அந்த நிலைக்கு நாம் வரவேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே இந்த பகுதியில், இந்த இசையை நீங்கள் கேட்க விரும்புகிறேன். கிறிஸ்து உங்கள் வாழ்வில் இருக்கிறார் என்ற ஆனத்தத்தை நீங்கள் உணரும்படி விரும்புகிறேன், அவரால் என்ன செய்ய முடியும், அவர் உங்களுக்கு அளித்திருப்பவைகளை நினைத்திடுங்கள். தேவன் நம்மீது பொழிந்திருக்கும் வாக்குத்தத்தங்களை பற்றி நாம் பேசினோம், நீங்கள் எப்படி தேவனையும் அவருடைய சகல அன்பையும் கிறிஸ்துவின் வல்லமையையும் உங்கள் வாழ்வில் அனுபவிக்க முடியும் என்பதை கண்டறிந்திடுங்கள். அதுமட்டுமல்ல இவைகளுக்கான உத்வேகம் என்ன என்பதையும் இந்த வசனங்களில் இருந்து எப்படி அர்ப்பணிப்பது என்பதை பற்றியும் பார்க்கிறோம், நீங்கள் எப்படி அர்ப்பநிப்பீர்கள்?

ஏன்னா அது நமக்கு ரொம்ப கஷ்டமான ஒன்று, இதற்கான உத்வேகம் என்ன, வேயின், நாம எப்படி அர்ப்பணிப்பது?

**பார்பர்:..**அந்த அன்பிற்கு நாம திரும்பி போக இருக்கிறேம், அந்த அன்பை நம்மால் விவரிக்கவே முடியாது. அந்த அன்பினால் நாம் உந்தப்படும்போது, நாம் தேவனுடைய குணாதிசயத்தில் பங்குள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்துவிடாதீர்கள். பங்குள்ளவர்களாக இருக்கிறோம். அதாவது கிறிஸ்து நம்மக்குள் இருந்து பிதா எதிர்பார்ப்பதை தவிர கிறிஸ்து வேறொன்றையும் செய்ய மாட்டார். இந்த மாதிரியான ஒரு அர்ப்பணிப்பு மாம்சத்தில் இருந்து தோன்ற வாய்ப்பே இல்லை. நமக்குள் கிரியை செய்கிற  தேவனுடைய ஆவியானவரால் உண்டாகும். அதை நீங்கள் அதிகமாக போஷிக்கும்போது, அது உங்களுடைய வாழ்வில் அதிக, எதார்த்தமானதாக நடைமுறையாக மாறிடும்.

அதை நாம் எப்படி பார்க்கிறோம் என்பதை பவுல் செயல்முறைகளின் ரீதியாக கூறியிருக்கிறார், அப்படிதானே, ரோமர் 12:1-2ல். அவர் சொல்கிறார், “ அப்படியிருக்க, சகோதரரே, தேவனுடைய இறக்கங்களை முன்னிட்டு சொல்கிறேன்.” இரக்கம் என்பதற்கான வார்த்தை சாதாரண இரக்கத்தை குறிக்கும் வார்த்தை அல்ல. ஒரு அர்த்தம் போல ஒருவேளை காணப்படலாம், ஆனால் இது அதைவிட மேலானது நீ செய்யும்படி நான் உற்சாகப்படுத்தும் காரியத்தை பாதிக்கும் விதமாக

என்னால் எதையும் செய்ய முடியாது என்பது போல இருக்கிறது. அதை செய்யும்படி உன்னுடைய மனதை நீ ஒருமுகப்படுத்தி கொள்ள வேண்டும். உன்னை வேண்டிகொள்ளுகிறேன். தேவனுக்கு முன்பாக நான் முழங்காலில் நின்று இதற்காக வேண்டுகிறேன்.

அவர் சொல்கிறார், "சகோதரரே, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு, உங்கள் சரீரங்களை பரிசுத்த ஜீவ பலியாக ஒப்புகொடுங்கள்." மரித்த பலியாக அல்ல, பலவிதமான பலிகள் பலிபீடத்தில் செத்ததாக பலியிடப்படுகிறது. இந்த இடத்தில் பார்க்கும்போது, " பரிசுத்தமும் ஜீவ பலியுமாக, தேவனுடைய பிரியமுமானதாக, "இதை கவனியுங்கள், "இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனையாகும்." இப்ப, தேவனை ஆராதிக்க நான் கற்றுகொள்கிறேன் என்றால், அது வாழ்க்கை முறையாக மாறிடும். அது ஏதோ ஞாயிற்று கிழமை காலை பாடும் பாடல்களோ அல்லது எனக்கு பின்னால் பாடப்படும் பாடல்களோ அல்ல.

புதிய ஏற்பாட்டில் ஆராதனை என்பதற்கு மூன்று வார்த்தைகள் முக்கியமானவைகள். முதல் வார்த்தை லாற்றியோ. அடுத்தது செபோமாய், இதற்கு அர்த்தம் ஞாயிற்று கிழமை நீங்கள் நம்பியத்தை திங்கள் முதல் சனிகிழமை வரை உங்கள் வாழ்க்கை முறையாக இருந்து எல்லாருக்கும் சொல்வதாகும். அடுத்த ஒரு வார்த்தை இதுதான் பிராஸ்கூனியோ, அவருக்கு முன்பாக சாஸ்டாங்கமாக முகங்குப்புற விழுவது, இதைதான் வெளிப்படுத்தின விசேஷம்

முழுவதும் சொல்லப்பட்டு இருக்கிறது. அதனால இந்த புத்தியுள்ள ஆராதனை என்று சொல்லும்போது நாம், அவருக்கு நம்மை முழுவதும் அர்ப்பணித்தவுடன், நமக்குள்ளாக அவருடைய சு பாவத்தின் தன்மைகள் செயல்படவும் வெளிபடவும் துவங்குவதாக இருக்கிறது. இப்ப, இது நமது சுபாவத்திற்கு எதிரானது, அதனால்  எப்போதும் போராட்டம் இருந்துகொண்டே இருக்கும். நம்முடைய வாழ்வில் அவர் யார் என்பதில் நாம் பங்குள்ளவர்களாகதுவங்கும்போது, அது நம்மை அர்ப்பணிப்போடு நடந்துகொள்ளும் நிலைக்கு நடத்தி செல்வதாக இருந்திடும்.

இதுல இன்னொன்றை சேர்த்து சொல்வதற்கு சரியான நேரம், சிலர் கிருபையின் செய்தியானது தாங்கள் விரும்புகிற எந்த காரியத்தை செய்திட தங்களுக்கு லைசன்ஸ் அளிக்கிறது என்று நினைக்கிறார்கள். நிச்சயமாக இல்லை. கிருபையின் பிரசங்கம் நீங்கள் செய்யவேண்டியதை செய்ய உங்களுக்கு பலனளிக்கும் என்பதை கூறுகிறது. உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவானவர், தேவன் உங்கள் வாழ்வில் எதிர்பார்க்கும் காரியத்தை நீங்கள் செய்திடும்படி உங்களை ஊக்குவித்திடுவார். இது ஒரு லைசன்ஸ் என்று பார்க்கிறவர்கள் இதனுடைய முக்கிய சாராம்சத்தை இழந்துவிடுகிறார்கள். ஆவி உங்களை ஊக்குவித்து செயல்படுத்த நினைக்கிறது, ஆனால் மாம்சமோ உங்களை முழுவதுமாய் பின்னுக்கு இழுத்திடும்.

சரி, இரண்டாவது வசனத்தில் சொல்கிறார், “இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல்.” இதனுடைய அச்சின் வடிவத்திற்கு ஒத்துபோகவேண்டாம். உலகம் என்றால் அதனுடைய அமைப்பை குறிக்கிறது. இங்க ஒரு காரியத்தை மாற்றி சிந்திக்கும் நிலை இருக்கிறது. நாம் வெளிநாட்டில் இருக்கும் ஏலியன்களை போன்றவர்கள். இதை நாம் கடந்து செல்லவேண்டும், இதை கடத்து செல்லவேண்டும். அவர் சொல்கிறார், “நீங்கள் மறுரூபமாகுங்கள்.” எனக்கு பிடித்த வார்த்தை, மெட்டாமார்போசிஸ், உள்ளிருந்து வெளிவை மாற்றம். “உங்கள் மனம் புதிதாகிறதினாலே நீங்கள் மறுரூபமாகுங்கள்.”

புதிதாகுதல் என்ற வார்த்தைக்கு அர்த்தம் புத்துப்பித்து கட்டுதல். என் மனைவி ஒருமுறை என்னிடம் சொன்னால், என்ன சொன்னான்னா, “சமையல் அறையை புத்துப்பிக்க வேண்டும் என்றாள்.” அதற்கானதை வாங்கிவந்தேன். அதற்கு பிறகு நேர்த்தியானவைகளை செய்ய முற்பட்டேன், ஏன்னா கிட்சன அழகாக்கீட்டா, மற்றவை ஒருவேளை வியப்பமாக காணப்படலாம், அதனால வீடு முழுவதும் புதுப்பிக்கும் பணியை தொடர்ந்தோம். எனக்கு நினைவிருக்கிறது, “நா இன்னொரு தேசத்திற்கு அருட்பணி ஊழியமாக சென்றிருந்தேன், நா வந்ததும் அவ என்னோட கண்களை கட்டி என்னை வீட்டிற்குள் அழைத்து சென்றாள். அதே வீடுதான்னு எனக்கு தெரியும், ஆனா இப்ப அது அதே மாதிரி இல்லைன்னு தெரியும். எல்லா பழைய விஷயங்களும் அங்கிருந்து

விலக்கப்பட்டு புதிய மாற்றங்கள் செய்யப்பட்டு இருக்கிறது. அதுதான் இந்த வார்த்தை. இந்த வார்த்தை இதுதான், உங்கள் மனதை புதிதாக்குதல்.

நீங்க நினைக்கிற விதத்தையும் நீங்க செய்துவந்த விதத்தையும் எறிந்துவிட்டு புதிய காரியத்தை தரித்துகொள்ளுங்கள், “அப்போது தேவனுடைய பரிபூரணமான சித்தம் இன்னதென்று அறிந்திடுவீர்கள்.” எனக்கு ரொம்ப பிடிச்சது. உங்களுக்கு நீங்களே சோதித்து பாருங்க. அவங்க  இந்த நிகழ்ச்சியில் நாம பேசறத கேட்டு இதை பற்றி திரும்பவும் யோசிக்க வாய்ப்பிருக்கிறது. கவனிங்க, அவங்க தங்களுக்கு இதை சோதித்து பார்க்க முடியும். இதை கேட்டுக்கொண்டு இருக்கிறவர்கள், பவுல் சொன்னதை மட்டும் செய்தா போதும்: ஒரு முடிவு எடுங்க, அந்த முடிவானது அவர்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவை நேசிக்கும் நேசத்தின் உந்துதலாக இருக்கவேண்டும், அப்போது அவர்கள் தேவனுக்கு பிரியமும் அவருடைய பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று அவர்கள் வாழ்வில் அனுபவித்திடுவார்கள். அது நேர்த்தியானதாக இருக்கும். அப்ப தேவனுடைய சித்தத்திற்கு குறைவாக இருக்கும் எதுவும், அவருக்கு அர்ப்பணிக்க முடியாமல் இருக்கிற நம்முடைய தெரிந்தெடுப்புகள் எல்லாம், குறைந்த நன்மையை அளித்திடும், அது பிரியமானதாக இருக்காது, அது பூரணப்பட்டதாகவும் இருக்காது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இதுவரை இந்த காரியங்கள் அனைத்தையும் கற்றுகொண்டீர்கள். உங்களை விட்டு கொடுக்க கற்றுகொண்டீர்கள், அது சுலபமான விஷயம் அல்ல. ஒரு நல்ல உதாரணமும் உங்கள் வாழ்க்கையில் இருக்கிறது, மீன்பிக்கும் விருப்பம், சரி, ஒரு குறிப்பிட்ட பகுதியில் தேவன் உங்கள் வாழ்வில் என்ன செய்தாருன்னு சொல்லுங்கள்,

**பார்பர்:**...நிச்சயம், சொல்வேன். எனக்கு மீன் பிடிப்பது ரொம்ப பிடிக்கும், எனக்கு என்னோட அப்பா சொல்லிகொடுத்தார், என்னால மீன் பிடிக்க முடியும். அதனால, என்னோட வாழ்க்கை பூட்டப்பட்டிருந்த அறைகளில் இதுவும் ஒன்று என்று சொல்வேன். "தேவனே, எதை வேண்டுமானாலும் நீங்க தொடலாம், ஆனா இத பகுதிய மட்டும் தொடாதீங்க, ஏன்னா இதை என்னால நிச்சயம் செய்யமுடியும் என்பேன்." வாலிபர்கள் ஊழியத்தில் இருக்கும்போது ரெட்ரீட் போக திட்டம் போட்டது நினைவில் இருக்கிறது. நல்ல அருமையான ஏரிகள் குளங்கள் இருக்கும் இடமாக கேம்ப் போட நா திட்டம் பண்ணுவேன். இப்ப, தேவன் அதற்கு என்னை மன்னித்துவிட்டார், ஆனா நா நடந்துகொண்ட விதம் இப்படிதான் இருந்தது.

நல்லா நினைவிருக்கிறது ஒருமுறை ஒரு அழகான ஏரி இருந்த இடத்திற்கு  அருகில் முகாமிட திட்டமிட்டேன். அது ஒரு ஸ்பிரிங் பீல்ட், சுமார் 150 ஏக்கர் இருக்கும். அது அங்க இருக்குன்னு எனக்கு

தெரியும். அதிலிருந்து 12பவுண்ட் பாஸ் வழியில் வந்ததிருப்பதையும் கேள்வி பட்டிருக்கிறேன், அது பாஸ் மீனவர்களால் பிடிக்கப்பட்டது என்பதையும் மறுக்க முடியாது. அது சரின்னு யாருக்கு தெரியும். நான் அங்க போனேன் - குழந்தைகளை பார்த்துக்கொள்ள எப்போதும் ஒரு குழுவை என்னோடு அழைத்து செல்வேன் ஒரு பிரசங்கியாரையும் அழைத்து செல்வேன் ஏன்னா அப்பதா எனக்கு வேலை இருக்காது, நா சந்தோஷமா மீன் பிடிக்க போயிடுவேன் எல்லா பாராட்டும் கிடைக்கும் பணமும் கிடைக்கும் என்றிருந்தேன். அருமையாக இருந்தது. அதனால இந்த இடத்தை பிடித்தேன், நாங்க அங்க போனோம் எல்லாரும் அவங்க அவங்களோட குழுவோடு அங்க வந்திருந்தாங்க.

அந்த குழுவில் ஒரு நபர் இருந்தார். அவர் என்னுடைய அருமையான நண்பர். அவர் இப்போது பாட்ச்வாநாவில் மிஷினரியாக இருக்கிறார், அவரோட பெயர் ராபர்ட் போர்டன்பெரி. ராப்பட்டுக்கும் எனக்கும் மீன் பிடிப்பது ரொம்ப பிடிக்கும். நாங்க ஏற்கனவே திட்டம் போட்டிருந்தோம், எல்லா குரூப்பையும் செட்டில் பண்ணினதும், நாங்க மீன் பிடிக்க போகப்போறோம். எல்லாரையும் நாங்க படுக்கைக்கு அனுப்பினோம். நாங்களும் அவங்களோட சேர்ந்து இப்ப தூங்கனும். நீங்களும் அவங்கல்ல ஒருவரை போல நடந்துகொள்ளவேண்டுமே. நாங்க பன்னிரண்டு மணிக்கு படுக்கைக்கு போனோம், 1 மணிக்கு எழுந்தோம். மீன் பிடிக்க போனோம். நாள் முழுவதும், தூக்கமே இல்லை, ஒருமணிநேரம் தான் தூங்கினோம்.

யூத் கேம்ப் எப்படி இருக்குன்னு தெரியுள்ள. பிரிச்பீ, நீச்சல், எல்லா கூத்தும் இருக்கும். சரி, அன்றைக்கு ராத்திரி ரொம்ப சோர்ந்துபோயிட்டேன். மரி த்தவனை போலிருந்தேன். செய்தியில் என்ன சொல்லப்பட்டது என்று எல்லாத்ததையும் விட்டுட்டேன். அதன் முடிவில் அவர் ஒரு அழைப்பை கொடுத்தார், பல வருடங்களாக நான் பார்த்திராத விதத்தில் தேவன் அசைவாடுவதை அங்கு பார்த்தேன். பல மாதங்களாக நாங்கள் ஜெபித்துகொண்டிருந்த சிறுவர்கள் அன்றைக்கு இரட்சிக்கப்பட்டார்கள். நா அப்பதா  யோசிக்க ஆரம்பித்தேன், ஆ ஆ, என்ன நடக்குது. என்னுடைய பங்கு இதில் தேவன், என்று நினைத்தேன்.

உடனே நா முழங்கால் படியிட்டு ஜெபிக்க துவங்கினேன், “ஓ, தேவனே, இந்த பிள்ளைகளுக்கு உதவிடும்” அப்ப தேவன் என்னிடம் பேசுவதை நான் உணர்ந்தேன். உரத்த சத்தத்தை கேட்டேன் என்று சொல்லமுடியாது, ஆனால் எனக்குள் ஒரு உள்ளுணர்வு உண்டானது. அதாவது, :ஹே, வேயின், நா உங்கிட்ட ஒரு நிமிடம் பேச எனக்கு வாய்ப்பு தருகிறாயா. என்னுடைய வார்த்தையை அறிந்துகொள்ள என்னை தெரிந்துகொள்ள என்னுடைய வார்த்தையில் நேரத்தை செலவிடும்படி நீ கடைசியாக எப்போது உட்கார்ந்தாய் என்றார்.” அப்ப, எனக்கு, என்ன நடக்குதுன்னு உடனடியாக புரிந்துகொள்ள முடிந்தது. அதாவது, என்னுடைய இருதயத்தில் இருக்கும் அந்த அறையை பற்றி எனக்கு தெரியும். எல்லாருக்கும் தெரியும். என்ன செய்வதென்று

எனக்கு ஒன்னும் புரியல, அதனால நா சொன்னே, “சரி, ஆண்டவரே, என்ன மன்னிச்சிடுங்க. உண்மையாகவே, நா கொஞ்ச நாளைக்கு இதை விட்டுவிடுகிறேன் என்று நீர் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்றேன்.” அவர் சொன்னார், “அப்ப, மறுபடியும் நாம முதல்ல இருந்து ஆரம்பிக்கவேண்டும் .” நா சொன்னே, என்னுடைய மனதில் இந்த காரியங்களை குறித்து நான் யோசித்துகொண்டு இருக்கிறேன். “சரி, நா என்ன செய்யணுன்னு நினைக்கிறீங்கள், இந்த விஷயத்தை நா விட்டுடனுமா? அப்ப தேவன் பேசுகிற மாதிரியே இருந்தது, “இது நல்ல விஷயம்தான்.” அப்ப நா யோசிக்க ஆர்மபித்தேன், இது அசட்டு தனமாக இல்ல.” அங்கிருந்து எழுந்தேன், கதையை சுருக்கமாக சொல்றேன், ஒவ்வொரு குழுவையும் அவர்களுக்கு தோன்றுகிற காரியத்தை செய்திட நா சொன்னேன்.

சுமார் ஐந்து நிமிடங்கள் கழித்து, யார் உள்ள வந்தாங்கன்னு உங்களுக்கு தெரியுமா? அவங்க எல்லாரும் வெளியில் போயிட்டாங்க இப்ப மரத்துக்கு அடியில் தனியா உட்கார்ந்திருந்தேன். ராபர்ட் போர்டன்பெரி. அவர் எங்கிட்ட வந்து சொன்னார், வேயின். நா அவர் பார்த்து சொன்னேன், “எஸ், உனக்கு உதவி தேவையா, மகனே? அவர் சொன்னார், “நா மரத்துக்கு அடியில் உட்கார்ந்து ஜெபிக்க துவங்கினேன், ஆனா தேவன் இங்க வந்து உன்னிடம் பேசும்படியாக என் இருதயத்தில் ஏவினார் என்றார்.” நா கேட்டேன், “நா உனக்கு எப்படி உதவி செய்வது என்றேன். அதற்கு அவர், “அதுதான் இப்ப

பிரச்சனையா இருக்கு. உன்கிட்ட சொல்ற அளவிற்கு என்னிடம் எஹ்டுவுமே இல்லை. எங்கிட்ட சொல்ல உனக்கு ஏதாவது இருக்கிறதா என்றார்." அப்படிதா இருந்தது. நா யோசிக்க ஆரம்பித்தேன், தேவன் என்னிடம் கேட்டார், "படமா வரைந்து காட்டணுமா? உன்னுடைய நெற்றியில் நான் எழுதி காட்டவேண்டுமா? இறுதியாக நா, சரி, ராபர்ட், நா உங்கிட்ட ஒரு விஷயத்தை சொல்லணும் என்றேன்." நான் சொன்னேன், "தேவன் என்னிடத்தில் என்னோட பாஸ் மீன்பிக்கும் கருவிகளை கொடுக்கும்படி சொன்னார், நா எங்கிட்ட இருக்கிற,என்னோட உம்கோ தேக்கள் பாக்ஸ் அப்பறம் இரண்டு பக்கமும் இருக்கிற ஐந்து செல்ப், என்னோடு டம்மி புழுக்கள் அப்பறம் எங்கிட்ட இருக்கிற எல்லாத்தையும் குடுத்துவிடுகிறேன் என்று சொன்னேன்." அது மட்டுமில்லை, "என்னோட இரண்டு லீவ்ஸ் ஸ்பீட் ச்ப்போளையும் இரண்டு அம்பாசடர் துடுப்புகளையும் தருகிறேன் என்றேன்." என்னோட எலிவேட்டர் இன்னும் உச்சத்தை தொடாதாது போல  என்னை பார்த்துகொண்டு இருந்தான். அவன் கேட்டான், "உனக்கு இப்ப என்ன தான் பிரச்சனை? நா சொன்னே, :தயவு செய்து என்ன தொந்தரவு செய்யாதே". ஒவ்வொரு முறையும் சோர்ந்து போய் கத்தீட்டே சிலுவைக்கு முன்பாக வந்திடுவேன், ஆனா அங்க வந்ததுக்கு அப்பறம்தான் தெரியும் நா இருக்கவேண்டிய இடம் இதுதான் என்று.

ஆனா நா வீட்டுக்கு போனதும் எனக்கு என் மனைவிக்கும் இடையில் ஒன்று நடந்தது. எங்களுக்குள் ஒரு அழகான உறவு இருப்பதாக நான்

நினைத்துகொண்டு இருந்தேன், அப்படிதான் இருந்தோம். ஆனால் நாங்க ரொம்ப ஆழமான உறவை கொண்டிருக்க வில்லை. என்னுடைய வாழ்வில் இருக்கிற மாற்றத்தை அவள் பார்த்ததும், என்னை இரண்டு மூன்று வாரங்களுக்கு வைரஸ் தொற்றிகொண்ட நபரை போல பார்த்து வந்தாள். இறுதியாக ஒருநாள் - அவ ரொம்ப விலையேறபெற்றவள் - அவள் என்னை அழைத்து சொன்னாள், “வேயின், உங்ககிட்ட நா கொஞ்சம் பேசனும்.” அவ சொல்லும்போது அழ ஆரம்பித்தாள். குழந்தைகள் ஏதோ பிரச்சனை பண்ணீட்டாங்கன்னு நினைச்சேன், அதனால் வீட்டுக்கு போனேன். அப்ப அவ எங்கிட்ட சொன்னா, வேயின், நீங்க என்ன செய்திருக்கீங்கன்றத இப்பதா தெரிஞ்சுக்கிட்டேன், நீங்க தேவன் உங்க மூலமா வாழ முடியாதபடி தடையாக இருந்ததை நீக்கி போட முன்வந்ததால உங்கள் வாழ்வில் உண்டான மாற்றத்தை தெரிந்துகொண்டேன் என்றாள். மேலும் அவ, :நீங்க என்னை மன்னிக்கும்படி கேட்கிறேன் என்று சொன்னாள்.”

ஏன்னு யோசிக்க ஆரம்பித்தேன்? எனக்கு தெரிந்த நபர்களில் இவளை போல ஒருவரை நான் பார்த்தே கிடையாது அவ்வளவு நேர்த்தியான நபர். அவ சொன்னா “இல்ல, எனக்குள்ள கசப்புணர்வு இருந்துச்சு, ஏன்னா ஸ்டெப்னி பிறந்தப்ப நீங்க என்னை உங்க அம்மா வீட்டில விட்டுட்டு மேற்கு டெக்ஸ்சாசுக்கு மான் வேட்டைக்காக போயிட்டீங்க.” மேலும் அவ, “நீங்க எப்பவும் உங்க விருப்பத்தையே பார்ப்பது போல இருந்தது. ஆனா, வேயின், இப்ப நீங்க தேவனுடைய காரியத்தை

செய்ய வாஞ்சையாக இருக்கீங்க, நீங்க என்னை மன்னிக்கும்படி கேட்கிறேன் என்றாள்."

தேவன் என்ன செய்தார், நான் விட முடியாமல் இருந்த ஒரு விஷயத்தை நான் விட்டுவிட தேவன் அந்த ஒரு அனுபவத்தை எனக்கு கொடுத்தார், ஆனா இந்த உலகத்தில் என்னுடைய மிக நெருங்கிய நண்பர் யாருன்னு கேட்டா அது என்னோட மனைவிதான் என்று பெருமையாக சொல்லுவேன். எங்களுடைய உறவை விளக்கி சொல்ல முடியாத அளவிற்கு அவர் ஆழமானதாக மாற்றிவிட்டார். ஜான்.

மூன்று வருடங்களுக்கு பிறகு, எங்க பயன் இப்ப கொஞ்சம் வளந்துட்டான், ஸ்டீவனுக்கு, நாலு வயது ஆனது, "டாடி, மீன் பிடிக்கக போலாம் என்றான்." நா சொன்னேன், "நா அதற்கு அடிமை, போக முடியாது." அதற்கு அவன், "இல்ல, டாடி, அதற்காக ஜெபிக்கலாம் என்றான்." நாங்க ஜெபித்தோம். ஒரு நபர் என்னை தொலைபேசியில் அழைத்து சொன்னார், "உங்களுடைய சாட்சியை நான் கேட்டேன்." என்று சொல்லி அவர், " உங்களுக்கு ஒன்றை கொடுக்கும்படி தேவன் என் இருதயத்தில் ஏவினார் என்றார். " அவர் யாரென்று எனக்கு தெரியாது. அவருடைய வீட்டிற்கு சென்றோம், அவங்க கராஜிற்கு சென்றோம், அது ஒரு விளையாட்டு பொருட்கள் கூடம் போல இருந்தது. அவர் என்னிடம் சொன்னார், "உங்களுக்கு பிடித்த துடுப்பை எடுத்துக்கோங்க, உங்களுக்கு தேவையானதை எடுத்துகொள்ளுங்கள்

என்றார்.” அதற்கு நான், நீங்க என்ன பேசறீங்க என்றேன். அதற்கு அவர், “தேவன் இதை உங்களுக்கு கொடுக்கும்படி என்னிடம் சொன்னார் என்றார்.” நான் கொடுத்ததை விட சிறந்த ஒன்றை அவர் எனக்கு இப்போது கொடுத்தார்.

இப்ப அது திரும்பவும் வந்துவிட்டது, ஆனா அது எனக்கு உரியது அல்ல. அது அவனுக்கு உரியது என்னுடைய மகனுக்கு சொந்தமானது. அதாவது, என்னை, பொறுத்தவரை தேவன் நம்மை சம நிலையை அடைய செய்யும்படி சமநிலையற்ற ஒரு நிலையில் இருந்து தூக்கி கொண்டு போய் சமநிலையற்ற இன்னொரு நிலையில் நிறுத்தி இறுதியில் சமநிலை படுத்துகிறார்.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே, நாமும் இதை முயற்சிக்க விரும்புகிறோம், தேவனை நம்பிடுங்கள், அவர் உங்களை நேசிக்கிறார். அவர் உங்களோடு இணைந்து செயல்பட விரும்புகிறார். உங்களை நீங்கள் அவருக்கு திறந்துகொடுத்து இதுவரை அவருக்கு அடைந்துவைத்திருந்த கதவுகளை திறந்துகொடுத்து  உங்களை அர்ப்பணித்திடுங்கள். அவருடைய மன்னிப்பை பெற்றிட நாடுங்கள். அவரிடம் உங்களுக்கு உதவிட கேளுங்கள். அதினால் அவர் உங்களை உற்சாகப்படுத்துவத்தையும் நீங்கள் அவருக்கு கீழ்படிந்ததினால் சந்தொஷப்படுகிறதையும் உணர்ந்திடுவீர்கள்.  வேயின், நீங்க இங்க வந்து உங்களுடைய நேரத்தை பகிர்ந்துகொண்டதற்காக உங்களை

பாராட்டுகிறேன். இதை கேட்டுகொன்டிற்கும் நேயர்கள் அனைவரும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை கேட்டு மிகவும் உற்சாகமாக இருக்கிறார்கள். வருகிற நாட்களில் மறுபடியும் உங்களை சந்திப்போம் என நான் நம்புகிறேன். சரி, நேயர்களே, அடுத்த வாரம் நிகழ்ச்சியை தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.